குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண். 18/2011

அ.சா. 3

2024–ம் ஆண்டு ஏப்ரல் 08–ம் தேதி திங்கள்கிழமை அரசு தரப்பு சாட்சி 03–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.ஆனந்தன் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மாரிமுத்து | ஜாதி | |
| தந்தை பெயர் | கோவிந்தன் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 12.53 மணி,

Accused A1.Nallasamy, A3.Chandrasekar present. A2.Murugan absent. Petition u/s 317 Cr.P.C filed and allowed. Advocate Mr. Siddhartha sankar present for A1 and A2 and Advocate Mr. Ezhilarasu for A3. APP Mr.P.Suresh present.

**முதல் விசாரணை:**

1. நான் காமலாபுரத்தில் குடியிருந்து கொண்டு லோடு லாரிக்கு கயறு கட்டும் தொழில் செய்து வருகிறேன். கடந்த 01.12.2010 ம் தேதி காலை 07.45 மணியளவில் செட்டிபட்டி பிரிவு ரவுண்டானாவில் நாங்கள் வழக்கமாக கயிறு இழுக்கும் இடத்தில் இருந்த போது போலீசார் அங்கு வந்து லாரி திருடு போனது சம்பந்தமாக அந்த இடத்தில் படம் வரைந்து மகஜர் தயார் செய்தார்கள்.

2. லாரி திருடு போனது சம்பந்தமாக என்னிடம் விசாரித்தார்கள். நான் லாரி பற்றி தெரியாது என்று சொன்னேன். என்னிடம் சாட்சி கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது தான். **(அந்த 2 வது கையெழுத்து மட்டும் அ.சா.ஆ–1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. என்னுடன் கையெழுத்து போட்ட இன்னோரு நபர் யார் என்று தற்போது ஞாபகம் இல்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

S SHARMILA
Digitally signed by S SHARMILA
Date: 2024.04.08 17:46:19 +0530

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.**

3. நான் டிப்ளமோ வரை படித்து உள்ளேன். நான் தமிழில் தான் கையொப்பம் போடுவேன். போலீசார் கொடுத்த அழைப்பாணையில் ஆங்கிலத்தில் நான் கையெழுத்து செய்துள்ளேன் என்றால் சரி. கயிறு கட்டும் தொழில் செய்வர்களுக்கு ஆர்சி செட்டிபட்டியில் சங்கம் ஏதும் இல்லை. என்னுடன் 6 நபர்கள் வேலை செய்கிறார்கள். தினமும் மதியம் 1–2 மணிக்கு வேலைக்கு வந்து இரவு 2 மணிக்கு செல்வோம். சம்பவந்தன்று சற்று முன்னாடியே வந்து விட்டேன். தற்போது நான் கயிறு கட்டும் வேலை தான் செய்து வருகிறேன்.

4. 2 போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து சம்பவ இடத்திற்கு அருகில் இருக்கும் கடைகள் எவ்வளவு தூரத்தில் உள்ளது என்று குறிப்பிட்டு மகஜர் தயார் செய்தார்கள் அதில் நான் கையெழுத்து போட்டேன். நான் லோடு ஏற்றும் வேலையில் உள்ளதால் போலீசார் கேட்டு கொண்டதற்கு இணங்க பொய்சாட்சியம் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.எனது முன்னிலையில் பார்வை மகஜர் தயாரிக்க பட்டிருந்தால் அதில் உள்ள சங்கதிகளை என்னால் கூறியிருக்க முடியும் என்றாலும் என்னுடன் கையெழுத்திட்ட நபரின் பெயரை என்னால் சொல்லியிருக்க முடியும் என்றாலும் சரியல்ல.

5. சம்பவ இடத்தில் மின்விளக்கு இல்லை என்றாலும் நான் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து போட்டேன் என்றாலும் சரியல்ல. நான் செட்டிபட்டியில் வைத்து தான் கையெழுத்து போட்டேன்.

**மறு விசாரணை : இல்லை**

விசாரணை முடிந்த நேரம்: 01.06 மணி,

S SHARMILA

Digitally signed by S SHARMILA
Date: 2024.04.08 17:46:24 +0530